**உதவி அமர்வு நீதிமன்றம், தேவகோட்டை**

**---**

**முன்னிலை: திருமதி. பா.கலை நிலா, எம்.எல்.,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**தேவகோட்டை.**

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ம் நாள் செவ்வாய்கிழமை**
**2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 03-ம் நாள்**
**அமர்வு வழக்கு எண் 55/2017**
**TNSV05-000357-2017**

(தேவகோட்டை காவல் நிலைய குற்ற எண்.112/2015, தேவகோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண் 29/2016)

| | | |
|---|---|---|
| புகார்தாரர் | - | காவல் ஆய்வாளர்,<br>தேவகோட்டை காவல் நிலையம்,<br>காவல் நிலைய குற்ற எண்.112/2015 |
| எதிரி | - | மனோகரன் (எ) மகாலிங்கம் (48/15)<br>த/பெ.முத்து, தென்னீர் வயல், தேவகோட்டை தாலுகா. |
| குற்றச்சாட்டு | - | குற்றச்சாட்டு :-<br>எதிரி மீது இதச பிரிவுகள் 436, 294(பி), 506(2)ன் கீழ் அசிங்கமாக பேசியும், கொலை மிரட்டல் செய்துள்ளதாகவும், தென்னங்கீற்று கொட்டகைக்கு தீ வைத்துள்ளதாக. |
| குற்றம் சாட்டப்பட்ட நபரின் வாதுரை | | குற்றவாளி இல்லை. |
| முடிவு | | குற்றம் சாட்டப்பட்ட நபர் குற்றவாளி இல்லை என முடிவு செய்யப்படுகிறது. |
| நீதிமன்றத்தின் தீர்ப்பு | - | முடிவாக, எதிரி மீது பிரிவுகள் 436, 294(பி), 506(2)ன் படியான குற்றச்சாட்டு அரசுத் தரப்பால் தகுந்த சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால் |

| | | |
|---|---|---|
| | | சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, அவரை குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும் அவரால் கொடுக்கப்பட்ட பிணை முறி ஆவணங்கள் அனைத்தும் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. |
| சான்று பொருள் குறித்த உத்தரவு | – | இல்லை |

இவ்வழக்கு கடந்த 13.03.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 1 திரு.பாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கௌதம் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் அனைத்தும் நன்கு பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கில் கடந்த 02.03.2015 ம்தேதி காலை 5.30 மணியளவில் வாதியாகிய தேவகோட்டை வட்டம், தென்னீர் வயல், காஞ்சரவயலை சேர்ந்த முருகேசன் மனைவி செல்வி என்பவருக்கும் அவர்களின் உறவினர்களான காளியம்மாள், பூபதி, சுந்தரபாண்டி ஆகியோர்களுக்கும் தென்னீர்வயல் முத்து நகர் பாதையின் கிழக்கு பக்கம் உள்ள மேற்கண்ட நான்கு பேருக்கும் பாத்தியப்பட்ட இடம் பக்கம் வாதி செல்வி மற்றும் சாட்சிகள் பூபதி, சுந்தரபாண்டி ஆகிய மூவரும் நடைபயிற்சி மேற்கொண்டிருந்த போது எதிரி மேற்கண்டவர்களுக்கும் தனக்கும் உள்ள முன் பகையை மனதில் கொண்டு இடத்திற்குள் வாதி அமைத்து இருந்த தென்னங்கீற்று கொட்டகைக்கு தீ வைத்ததை பார்த்து மூவரும் சென்று

கேட்டு சத்தம் போட்டபோது எதிரி வாதி மற்றும் சாட்சிகளை பார்த்து தேவிடியா முண்டைகளா என்று அசிங்கமாக பேசி இந்த இடத்தை விட்டு ஓடி விடுங்கள் இல்லையேல் வெட்டி கொன்றுவிடுவேன் என்றும் பள்ளி செல்லும் உங்கள் பிள்ளைகளையும் வெட்டி கொன்று விடுவேன் என்றும் கூறி அருவாளை காட்டி மிரட்டியுள்ளதாகவும், அதனடிப்படையில் எதிரி மீது இதச பிரிவுகள் 436, 294(பி), 506(2)ன் படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வழக்கு கோப்புகளை ஆராய்ந்து அறிவார்ந்த நீதித்துறை நடுவர், தேவகோட்டை விசாரணைக்கு எடுத்து எதிரிக்கு இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்து கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு பின்னர் இவ்வழக்கில் கண்ட குற்றம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தினால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்ற வகையில் சிவகங்கையிலுள்ள மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கு அமர்வு வழக்கு எண்.55/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

3) மேற்கண்டவாறு இவ்வழக்குக் கோப்புகள் இந்நீதிமன்றத்திற்கு வரப்பெற்ற பின்னர் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களை ஆய்வு செய்தும் எதிரி மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரம் இருப்பதாகக் கருதியதால் எதிரி மீது இதச பிரிவுகள் 436, 294(பி), 506(2)ன் படியும் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக்கூறி வினவ எதிரி குற்றச்சாட்டினை மறுத்தார்.

4) எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் 10 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் தாக்கல் இல்லை.

**<u>5) அரசு தரப்பு வழக்கு சாட்சியங்களின் சுருக்கம் :</u>**

அ.சா.1 செல்வி தனது சாட்சியத்தில், காஞ்சிரவயல் கிராமத்தில் தனக்கு சொந்தமாக சர்வே எண்.47/6 ல் தங்கள் பங்காளிகளான சாமியய்யா வகையறாவிற்கு சொந்தமான சொத்துக்கள் இருப்பதாகவும், அந்த இடத்தில் நான்கு தனித்தனி குடிசைகள் அமைத்திருப்பதாகவும், அதில் மரங்கள் மற்றும் கிணறு அமைத்து தோட்டத்திற்காக பயன்படுத்துவதாகவும், கடந்த 02.03.2015 ம் தேதியன்று காலை சுமார் 05.30 மணியளவில் அந்த நான்கு குடிசைகளில் தனக்குச் சொந்தமான குடிசை தீப்பற்றி எரிந்ததாகவும், சம்பவ இடத்தில் தான், சுந்தரபாண்டியன், பூபதி, காளியம்மாள் ஆகியோர் தோட்டத்திற்கு வரும்போது தீப்பற்றி எரிந்துகொண்டிருந்ததாகவும், தீப்பற்றி எரிந்ததற்கு எதிரிதான் காரணம் எனவும், நெருப்பை அணைப்பதற்கு முயற்சி செய்ததாகவும், அருகில் இருந்த முக்கூரணியிலிருந்து நீர் எடுத்துவந்து அணைக்க முயற்சித்ததாகவும், நெருப்பை அணைக்க முடியவில்லை எனவும், எதிரி நான் அதுபோல்தான் நெருப்பு வைப்பேன் என்று சொன்னதாகவும், தேவடியா என்று தங்கள் அனைவரையும் திட்டியதாகவும், திட்டி தங்கள் அனைவருக்கும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும், இது தொடர்பாக தேவகோட்டை தாலுகா காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் புகார் மனு அ.சா.ஆ.1 எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6) அ.சா.2 பூபதி தனது சாட்சியத்தில், தனது கிராமத்தில் பங்காளிகளுக்கு சொந்தமான சர்வே எண்.47/6 ல் என்ற இடத்தில் கொட்டகை அமைத்து மரங்கள் கிணறு அமைத்து பராமரித்து வந்ததாகவும், அங்கு நான்கு கொட்டகைகள் இருந்ததாகவும், கடந்த 02.03.2015 ம் தேதி காலை சுமார் 05.30 மணியளவில் தனது தோட்டத்தை பார்க்க செல்வி, சுந்தரபாண்டி மற்றும் தான் ஆகியோர் சென்றதாகவும், தங்கள்

அனைவருக்கும் சொந்தமான கொட்டகையில் தீ எரிந்துகொண்டிருந்ததாகவும், சம்பவ இடத்தில் மகாலிங்கம் என்ற மனோகரன் இருந்ததாகவும், அவர் எதிரி எனவும், மறைந்து இருந்த எதிரி தங்களை பார்த்து தேவடியா முண்டைகளா அப்படித்தான் உங்கள் குடிசைகளை எரிப்பேன் என்று தகாத வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், செல்வி என்பவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாகவும் அதில் தான் அ.சா.ஆ.2 சாட்சி கையொப்பம் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7) அ.சா.3 சுந்தரபாண்டி தனது சாட்சியத்தில், தனது கிராமத்தில் சர்வே எண்.47/6 என்ற இடத்தில் கொட்டகைகள் அமைத்து நாவல் மரம், கிணறு அமைத்து அனுபவம் செய்து வருவதாகவும், கடந்த 02.03.2015 ம் தேதி காலை சுமார் 05.30 மணியளவில் தான், செல்வி, பூபதி, காளியம்மாள் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்ததாகவும், அப்போது தங்கள் பங்கிற்கு சொந்தமான கொட்டகை எரிந்துகொண்டிருந்த்தாகவும், சம்பவ இடத்தில் எதிரி மறைந்து கொண்டிருந்ததாகவும், எதிரி தேவடியா முண்டைகளா அப்படித்தான் எரிப்பேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், தங்கள் பிள்ளைகள் பள்ளிக்கு செல்லும்போது கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியதாகவும், நெருப்பை அணைக்க முயற்சி செய்ததாகவும், சம்பவம் தொடர்பாக செல்வி புகார் கொடுத்ததாகவும், அதில் தான் செய்த சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

8) அ.சா.4 காளியம்மாள் தனது சாட்சியத்தில், தங்கள் கிராமத்தில் தங்களுக்கு சொந்தமான நிலம் உள்ளதாகவும், அதன் சர்வே எண் தெரியாது எனவும், சுமார் 5 வருடத்திற்கு முன்பு ஒருநாள் காலை 5 மணியளவில் தான், சுந்தரபாண்டி, செல்வி, பூபதி ஆகியோர் நிலத்திற்கு சென்றுகொண்டிருந்ததாகவும், தான் சம்பவ இடத்திற்கு சென்றபோது

தனக்கு சொந்தமான கொட்டகை எரிந்துகொண்டிருந்ததாகவும், ஆஜர் எதிரி அங்கு மறைந்திருந்ததாகவும், தேவடியா முண்டை என்று தகாத வார்த்தைகளால் திட்டி தங்களது கொட்டகையை அப்படித்தான் எரிப்பேன் என்று பேசியதாகவும், தங்கள் பிள்ளைகள் பள்ளிக்கு போகும்போது கொலை செய்துவிடுவதாக மிரட்டியதாகவும், ஊரணியிலிருந்து தண்ணீர் எடுத்து அணைக்க முயற்சி செய்ததாகவும் அ.சா.ஆ.1 புகாரில் தான் கைரேகை செய்ததாகவும் அது அ.சா.ஆ.4 எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

9) அ.சா.5 வாசுதேவன் தனது சாட்சியத்தில், எதிரியை தெரியும் எனவும், முருகேசன் மனைவி செல்வியை தெரியும் எனவும், கடந்த 02.03.2015 ம் தேதியில் தென்னீர்வயல், முத்தூரணி பிள்ளையார் கோவில் அருகே செல்வியை பார்க்க போயிருந்ததாகவும், அப்போது காலை 05.30 மணியிருக்கும் எனவும், செல்வி அவர் வீட்டில் இல்லாத்ததால் பக்கத்துவீட்டுக்காரர்களிடம் கேட்டதாகவும், நடைபயிற்சிக்கு சென்றிருப்பதாக சொன்னதாகவும், தன்னுடன் பொட்டவயல் கிராமத்தை சேர்ந்த நாராயணன் வந்திருந்ததாகவும், நடைபயிற்சி சென்ற இடத்திற்கு தேடிப்போனதாகவும், செல்வியுடன் சுந்தரபாண்டி, பூபதி ஆகியோர் நின்று கொண்டிருந்ததாகவும், அங்கு கிழக்கு பக்கமாக நெருப்பு எரிந்துகொண்டிருந்ததாகவும், தாங்கள் பார்க்கும்போது அங்கிருந்து எதிரி வெளியே வந்ததாகவும், செல்வியுடன் எதிரி சண்டை போட்டுக்கொண்டிருந்ததாகவும், தாங்கள் அங்கிருந்து கிளம்பிவிட்டதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

10) அ.சா.6 நாராயணன் தனது சாட்சியத்தில், கடந்த 02.03.2015 ம் தேதியன்று தானும், வாசுதேவனும் இடம் பார்ப்பதற்காக காலை 05.30 மணியளவில் கிளம்பிபோனதாகவும், தென்னீர்வயல் கிராமத்தில் முத்தூரணி

அருகில் செல்வி வீட்டிற்கு போனதாகவும், அவர் நடைபயிற்சி சென்றுவிட்டதாகவும், நடைபயிற்சி போன இடத்திற்கு சென்று செல்வியை பார்த்ததாகவும், செல்வியுடன் இரண்டு, மூன்று நபர்கள் நின்றுகொண்டிருந்ததாகவும், தென்னங்கூரையில் மனோகரன் தீ வைத்துவிட்டு போன சம்பவத்தை பார்த்ததாகவும், அவர்கள் பேசியது தனக்கு சரியாக கேட்கவில்லை எனவும், சாட்சியம் அளித்துள்ளார்.

11) அ.சா.7 ராமநாதன் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியும் எனவும், புகார் மனுதாரர் தன் மகள் எனவும், கடந்த 02.03.2015ம் தேதியன்று தகவல் தெரிந்து தோட்டத்திற்கு போனதாகவும், தென்னங்கீற்று வைத்து நான்கு வீடு அமைத்திருந்ததாகவும், அதில் ஒன்று தீப்பற்றி எரிந்துகொண்டிருந்ததாகவும், தான் போதும்போது 12 அல்லது 1 மணி இருக்கும் எனவும், காவல் ஆய்வாளர் விசாரித்துக் கொண்டிருந்ததாகவும் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் தயார் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12) அ.சா.9 சேகர் முனியப்பன் தனது சாட்சியத்தில், கடந்த 2015ம் வருடத்தில் தான் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது தென்னீர்வயல், காஞ்சிரவயல் கிராமத்தை சேர்ந்த முருகேசன் மனைவி செல்வி என்பவர் 02.03.2015ம் தேதி மதியம் 12.00 மணியளவில் தென்னீர்வயல் கிராமத்தை சேர்ந்த முத்து மகன் மனோகரன் என்ற மகாலிங்கம் என்பவர் தனது கணவருக்கு பாத்தியமான தென்னீர்வயல் முத்துப்பிள்ளையார் கோவில் அருகில் உள்ள நான்கு பங்காளிகளுக்கு பொதுவான கொல்லையில் தனித்தனியாக தென்னங்கீற்று கொட்டகை கட்டி பராமரித்து வந்ததாகவும், கடந்த 02.03.2015ம் தேதியன்று புகார்தாரரின் தென்னங்கீற்று கொட்டகையை தீ வைத்து எரித்து விட்டு ஓடிவிட்டதாகவும், அதை ஏன் இப்படி செய்கிறாய்

என்று கேட்டதற்கு நான் அப்படித்தான்டி தீ வைப்பேன் தேவிடியா முண்டைகளா, அப்படியே ஓடி வந்து தன் கையில் வைத்த அருவாளை காட்டி கொலை மிரட்டல் காட்டியதாகவும், அதனை தொடர்ந்து பிள்ளைகளையும் கொலை செய்வதாக மிரட்டியதாகவும், கொடுத்த புகார் மனுவின் பெயரில் தேவகோட்டை தாலுகா காவல் நிலைய குற்ற எண்.112/2015, பிரிவு 436, 294(பி), 506(2) இதச–வாக வழக்கு பதிவு செய்ததாகவும் அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

13) அ.சா.10 திரு.அண்ணாத்துரை, தற்போது கோயம்புத்தூர் குற்றப்பிரிவு குற்ற புலனாய்வுத்துறை காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 02.03.2015 ம் தேதி தேவகோட்டை தாலுகா, காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் 12.45 மணிக்கு தேவகோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் சேகர் முனியப்பன் என்பவர் தேவகோட்டை தாலுகா, காவல் நிலைய குற்ற எண். 112/2015 சட்டப்பிரிவு 436, 294(b) 506(2) இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கையை தன்னிடம் கொடுத்ததாகவும், அவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு 13.30 மணிக்கு சென்று சாட்சிகள் ராமநாதன், பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 என்றும், பின்பு, சாட்சிகள் செல்வி, பூபதி, சுந்தரபாண்டி காளியம்மாள், ராமநாதன், பாலசுப்பிரமணியன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு, உதவி ஆய்வாளர் சேகர் முனியப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், கடந்த 03.03.2015 ம் தேதி சாட்சிகள் வாசுதேவன், நாராயணன்

ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், கடந்த 05.03.2015 ம் தேதியன்று வழக்கின் எதிரியானவர் சிவகங்கை மாவட்டம், அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணைவு உத்தரவு பெற்றுள்ளார் என்றும், கடந்த 27.04.2015 ம் தேதி வழக்கில் தன்னுடைய விசாரணையில் எதிரி மீது குற்றச்சம்பவம் உறுதியானதால், எதிரி மீது சட்டப்பிரிவுகள் 436, 294(பி), 506(2) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

14) அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு எதிராக உள்ள சங்கதிகளை பிரித்தெடுத்து எதிரிக்கு விளக்கி கூறி அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் படி வினவ எதிரி குற்றத்தினை மறுத்தார். எதிரி தன்னுடைய தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று குறிப்பிட்டார். ஆனால் எதிரி தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ விசாரிக்கப்படவில்லை. எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

13) இந்த வழக்கில் தீர்விற்குரிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது அரசு தரப்பால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

14) அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், எதிரி அ.சா.1 மற்றும் 3 நபர்களுக்கு சொந்தமான சர்வே எண்.47/6 சொத்தில், 2.3.2015 ஆம் தேதி காலை 5.30 மணியளவில் அ.சா.1 மற்றும் பிற சாட்சிகள் நடைபயிற்சிக்கு சென்ற போது, எதிரி அங்கு அ.சா.1 க்கு சொந்தமான கொட்டகையில் நெருப்பு வைத்து விட்டு அ.சா.1 மற்றும் பிற சாட்சிகளை பார்த்து தகாத வார்த்தைகளால் பேசி, அரிவாளை கொண்டு மிரட்டி கொலை மிரட்டல் விடுத்ததான அரசு தரப்பு வழக்கானது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து

நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் சாட்சிகள் சம்பவம் குறித்தும் எதிரியின் செயல் குறித்தும் குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ள நிலையிலும், புலன்விசாரணை அதிகாரியும் சரிவர புலன் விசாரணை மேற்கொண்டு எதிரி மீதான குற்றத்தை நிரூபித்துள்ள நிலையில், வழக்கு எதிரியை தண்டிக்குமாறு வாதிட்டார்.

15) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், அரசு தரப்பில் எதிரி சம்பவ இடத்தில் இருந்ததாகவோ அவர் குடிசைக்கு நெருப்பு வைத்ததாகவோ, சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரிய வரவில்லை என்றும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் உறவினர்கள் என்ற நிலையில், எதிரிக்கும் சாட்சிகளுக்கும் இடையே ஏற்கனவே உரிமையியல் சம்பந்தப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது என்ற நிலையில், தனிப்பட்ட சாட்சிகளை விசாரித்தாலேயே சம்பவம் நடைபெற்றதா, இல்லையா என்பது தெரியவரும் என்ற நிலையில், சம்பவ இடத்திலிருந்து எரிந்ததாக சொல்லப்படும் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படாத நிலையிலும், அரிவாளோ எதிரியால் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களும் கைப்பற்றப்படாத நிலையில், இப்புகாரானது சாட்சிகள் மீதான உரிமையியல் வழக்கினை முடிவுக்கு கொண்டு வரவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அரசு தரப்பில் குறிப்பிட்டுள்ளது போல் எவ்வித சம்பவம் நடைபெறவில்லை என்றும் அவ்வாறு சம்பவம் நடைபெற்றதாகவும் அரசு தரப்பில் குறிப்பிட்டு நிரூபிக்கப்படாத நிலையில், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

16) இருதரப்பு வாதங்களும் இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இவ்வழக்கினை பொருத்தமட்டில் எதிரி மீது செல்வி என்பவர் கொடுத்த புகாரின்

அடிப்படையில் இதச பிரிவுகள் 436,294(பி),506(ii) இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு பின்பு புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

17) எதிரி மீதான இதச பிரிவுகள் 436,294(பி),506(ii)ன் கீழான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து இந்நீதிமன்றத்தால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. முதலில் புகார்தாரர் எதிரி மீது அவர் புகார்தாரரின் கொட்டகையை எரித்து அதன் அடிப்படையில் அவருக்கு இழப்பை ஏற்படுத்தினார் என்று குறிப்பிட்டு புகார் அளிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் எதிரி மீது இதச பிரிவு 436 ன் கீழான குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

*Section 425 of the Indian Penal Code (IPC) defines "mischief" as intentionally or knowingly causing wrongful loss or damage to the public or any person by destroying or altering property to diminish its value or utility.*

*Section 436 of the Indian Penal Code (IPC) deals with mischief by fire or explosive substances intended to destroy a house, place of worship, or place for property custody. This is a severe, cognizable, and non-bailable offense, punishable by imprisonment for life or up to 10 years, along with a fine.*

மேற்கண்ட வரையறையின் படி ஒரு நபருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை நெருப்பு மூலமாக எரித்தோ அல்லது அவரால் குடியிருப்புக்காகவோ அல்லது வழிபாட்டிற்காகவோ அல்லது பொருட்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு பயன்படுத்தப்படும் இடமாகவோ உள்ள ஒரு இடத்தை நெருப்பு மூலமாக சேதப்படுத்தி அவருக்கு அதனால் இழப்பு ஏற்பட்டது என்பது நிரூபிக்கப்பட்டால்

மேற்கண்ட குற்றத்தினை பிரிவு 436–இன் வரையறைக்குள் கொண்டு வர இயலும் என்பது தெரிய வருகிறது.

18) இவ்வழக்கினை பொருத்தமட்டில், அ.சா.1 தனது புகாரில் 02.03.2015 காலை 5.30 மணியளவில் தானும், பூபதி, சுந்தரபாண்டி ஆகிய மூவரும் வாக்கிங் சென்ற போது அவர்கள் தோட்டத்திற்குள் நெருப்பு எரிந்து கொண்டிருந்ததாகவும், அங்கே சென்று பார்த்தபோது மனோகரன் கொட்டகைக்கு நெருப்பு வைத்துவிட்டு பக்கத்து கொட்டகைக்கு போனபோது அவரை பார்த்து கேட்டபோது, அவர் அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு கூறியுள்ளார். எனவே அவரது புகாரான அ.சா.ஆ.1–லிருந்து அவர் சம்பவ இடத்திற்கு சென்ற போது அவரது கொட்டகை எரிந்து கொண்டிருந்தது என்றும், அங்கு எதிரி நெருப்பு வைத்துக் கொண்டிருந்ததாகவும் குறிப்பிட்டு புகாரில் சொல்லியுள்ளார் என்பது தெரிய வருகிறது.

19) அ.சா.1 நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த போது, 02.03.2015 ம் தேதி காலை சுமார் 5.30 மணியளவில் சர்வே எண் 47 / 6 ல் உள்ள நான்கு குடிசைகளில் அவருக்கு சொந்தமான குடிசை தீப்பற்றி எரிய ஆரம்பித்ததாகவும், அப்போது சம்பவ இடத்தில் தானும், சுந்தரபாண்டி, பூபதி, காளியம்மாள் ஆகியோர் வந்து கொண்டிருந்த போது தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது என்றும், அதற்கு எதிரி தான் காரணம் என்றும் அந்த நெருப்பினை முக்கூரணியிலிருந்து நீர் எடுத்து வந்து அணைக்க முயன்றதாகவும், எதிரி அது போல் தான் நெருப்பு வைப்பேன் என்று சொன்னார் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அவர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது, "பெரியசாமி என்பவர் எங்கள் மீது தேவகோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 14/2015 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான்.

வழக்கில் நானும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். இவ்வழக்கில் அ.சா.2 மற்றும் 3 எனது உறவினர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் பார்வை மகஜரில் கையொப்பம் செய்த ராமநாதன் எனது தந்தை என்றால் சரிதான். பூபதி தனது சாட்சியத்தில் காளியம்மாள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் போது வரவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் காளியம்மாள் எனது மாமியார் வயது மூப்பின் காரணமாக பின்னால் வந்தார். குடிசை எரிந்தது சம்பந்தமாக தீயணைப்பு துறைக்கு தகவல் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை. போலீசாருக்கு தகவல் கொடுத்தும் முத்து ஊரணியிலிருந்து தண்ணீரை கொண்டு வந்து அணைத்தோம். நான் காவல் நிலையத்தில் எவ்வாறு புகார் கொடுத்தேன் என்றால், நேரடியாக சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் யாரால் எழுதப்பட்டது என்றால், நான் சொல்லி காவல் நிலையத்தில் எழுதினார்கள். அதை யார் எழுதினார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் 10 வருடங்கள் ஆனதால் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை. எனது முதல் விசாரணையில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதா, என்றால் ஆமாம். அ.சா.1 புகாரிலும் முதல் விசாரணையில் உள்ள கையெழுத்துக்கும் வேறுபாடு உள்ளதா, என்றால் புகாரில் தமிழில் கையெழுத்து செய்தேன். முதல் விசாரணையில் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்தேன்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

20) அ.சா.1ன் சாட்சியத்தில் இருந்து எதிரிக்கும் அ.சா.1 மற்றும் அவரது குடும்பத்தாருக்கும் இடையே சொத்து சம்பந்தமாக ஏற்கனவே முன்பகை இருந்து வந்துள்ளது தெரிய வருகிறது. மேலும் அவரது கையெழுத்து முரண்பட்டதாக உள்ளது குறிப்பிட்டு கேள்வி எழுப்பப்பட்டும் ஆங்கிலத்திலும், தமிழிலும் கையெழுத்து செய்வது வழக்கம் என குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. மேலும் அவரது

சாட்சியத்தில் இருந்தே தாங்கள் தோட்டத்திற்கு வரும்போது தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது என்றும், தீப்பற்றி எரிவதற்கு மனோகரன் தான் காரணம் என்றும் அவர் கூறியுள்ளார். எனினும், சம்பவ இடத்தில் எதிரி தீ வைத்ததாகவோ அதனை தான் பார்த்ததாகவோ குறிப்பிட்டு அவர் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

21) அ.சா.2 பூபதி தனது சாட்சியத்தில், 02.03.2015 அன்று காலை சுமார் 5.30 மணியளவில் தங்களது தோட்டத்தை பார்க்க செல்வி, சுந்தரபாண்டி மற்றும் தான் சென்று கொண்டிருந்த போது, அங்கு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்ததாகவும், சம்பவ இடத்தில் மகாலிங்கம் என்ற மனோகரன் இருந்தார் என்றும், அவர் எதிரி என்றும் அவர் அவ்வாறு தான் குடிசைகளை எரிப்பேன் என்று கூறினார் என்றும், முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, "சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் அ.சா.1 டன் இருந்தேனா என்றால் இருந்தேன். நான் என் முதல் விசாரணையில், சொல்லி உள்ள விபரங்கள் எனக்கு ஞாபகம் இருந்ததை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த விபரத்தை அ.சா.1 போலீசாரிடம் எவ்வகையில் தெரிவித்தார் என்றால் நேரில் தான் கூறினார். நாங்களும் சென்றோம்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

22) அ.சா.3 சுந்தரபாண்டி தனது சாட்சியத்தில் 02.03.2015 அன்று காலை சுமார் 5.30 மணியளவில் தான், செல்வி, பூபதி, காளியம்மாள் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தபோது அவர்கள் பங்கிற்கான கொட்டகை எரிந்து கொண்டிருந்தது என்றும், அங்கு எதிரி மறைந்து கொண்டிருந்ததாகவும், அவர் அப்படித்தான் எரிப்பேன் என்று கூறி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், பள்ளிக்கு செல்லும் குழந்தைகளையும் கொலை செய்து விடுவதாக மிரட்டியதாகவும், மேற்படி சம்பவம் தொடர்பாக

செல்வி புகார் கொடுத்ததாகவும், தான் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது, "சம்பவம் மாலை சுமார் 5.30 மணியளவில் நடைபெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவர் தனது குறுக்கு விசாரணையில், மொத்தம் எத்தனை குடிசைகள் இருந்தது என்றால், நாலு குடிசைகள் இருந்தது நாலு குடிசைகளும் ஒரே சேகரமாக இருக்குமா, என்றால் தனித்தனியாக இருக்கும். எரிந்ததாக சொல்லப்படும் குடிசை யாருடைய குடிசை என்றால் செல்வியின் குடிசை ஆகும். அந்த சொத்தைப் பொறுத்து என்னையும் ஒரு தரப்பினராக காண்பித்து தேவகோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

23) அ.சா.4 காளியம்மாள் தனது சாட்சியத்தில், அவர் சம்பவ இடத்திற்கு சென்ற போது அவருக்கு சொந்தமான கொட்டகை எரிந்து கொண்டிருந்தது என்றும் அங்கு எதிரி மறைந்திருந்தார் என்றும் தகாத வார்த்தையால் பேசினார் என்றும். கொட்டகையை அப்படித்தான் எரிப்பேன் என்றும், பிள்ளைகள் பள்ளிக்கு செல்லும்போது கொலை செய்து விடுவதாக மிரட்டினார் என்றும், சம்பவம் தொடர்பாக புகார் கொடுத்ததாகவும், அதில் தான் கைரேகை செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, "எரிந்ததாக சொல்லப்படும் குடிசைக்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அது முத்தூரணியில் உள்ளது. எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமாராக 200 மீ. தூரம் இருக்கும். அந்த குடிசை இருந்ததாக சொல்லப்படும் இடத்தை எதிரில் இளங்கோ என்ற நபருக்கு கிரயம் ஏற்படுத்தி அதில் சாட்சி கையொப்பம் செய்ததால் எதிரி மீது கோபம் என்றால் சரிதான். அந்த குடிசைக்கு மின் இணைப்பு உள்ளதா

என்றால் இல்லை. அப்போதுதான் கட்டப்பட்டது. நான்கு குடிசை கட்டியதில் ஒன்றை எரித்துவிட்டார்" என்று சாட்சியம் அளித்துள்ளார். அவரது சாட்சியத்தில் இருந்து குடிசை அப்போதுதான் ஏற்படுத்தப்பட்டிருந்ததாக அவரால் குறிப்பிட்டு சொல்லப்பட்டு, ஏற்கனவே எதிரிக்கும் அவர்களுக்கும் இடையே முன்விரோதம் இருந்ததாகவும் ஒப்புக்கொண்டு அவர் சாட்சியம் அளித்துள்ளது தெரிய வருகிறது.

24) அ.சா.5 வாசுதேவன் தனது சாட்சியத்தில், அவர் அ.சா.1 ஐ பார்க்க போயிருந்ததாகவும், அப்போது அவர் வீட்டில் இல்லை என்ற நிலையில், அவரை நாராயணன் என்பவருடன் சேர்ந்து தேடிய போது, செல்வியுடன் சுந்தரபாண்டி, பூபதி ஆகியோர் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், அங்கு கிழக்கு பக்கமாக நெருப்பு எரிந்து கொண்டிருந்தது என்றும், அங்கு இருந்து எதிரி வெளியே வந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது, முருகேசன் மற்றும் செல்வி எனக்கு ஒரு 20 ஆண்டுகளாக தெரியும். காலையில்5.30 மணிக்கு எதற்காக சென்றேன் என்றால் அவர்கள் இடத்தை பற்றி விசாரிப்பதற்காக சென்றேன். குடிசை எரிந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து நான் எவ்வளவு தூரத்தில் இருந்தேன் என்றால், நான் சம்பவ இடத்தின் அருகில் தான் இருந்தேன். அந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகே யார் யார் இருந்தனர் என்றால் மனோகரன் இருந்தார். என் முகவரிக்கும் முருகேசன், செல்வி இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 6 கி.மீ. தூரம் இருக்கும் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

25) அ.சா.6 நாராயணன் தனது சாட்சியத்தில், அ.சா.5 ஐ அனுசரித்து சாட்சியம் அளித்துவிட்டு, வாக்கிங் போன இடத்திற்கு சென்று செல்வியை பார்த்ததாகவும், அவருடன் இரண்டு, மூன்று நபர்கள் நின்று

கொண்டிருந்ததாகவும், மனோகரன் தீ வைத்து விட்டு போன சம்பவத்தை பார்த்ததாகவும், அவர்கள் பேசியது தனக்கு சரியாக கேட்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துவிட்டு, குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது, " அ.சா.1 செல்வி மூலம் சம்பவம் குறித்து எனக்கு தெரிய வந்ததா என்றால் அங்கு கூடியிருந்தவர்கள் பேசிக்கொண்டார்கள். நான் சம்பவத்தை நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. நான் எதிரியை அங்கு பார்த்தேனா என்றால் இல்லை" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

26) மேற்கண்ட நபர்களின் சாட்சியத்தில் இருந்து ஒரு கூரை கொட்டகை எரிந்ததாக சாட்சியம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த கூரை கொட்டகையை எதிரி எரித்ததாகவும், அதை நேரில் பார்த்ததாகவும் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. சம்பவ இடத்தில் எதிரி இருந்ததாகவே சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் அ.சா.1 தனது புகாரில் தான் அ.சா.2, 3 டன் வாக்கிங் சென்ற போது தனக்கு பாத்தியப்பட்ட குடிசை இருந்த இடத்தில் நெருப்பு வந்து கொண்டிருந்ததாக குறிப்பாக சொல்லிவிட்டு, சாட்சியம் அளித்த போது, சம்பவ இடத்திற்கு சென்ற போது அங்கு நெருப்பு எரிந்து கொண்டிருந்தது என்றும், எனவே அங்கு சென்று பார்த்தபோது எதிரி அங்கு நின்று கொண்டிருந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து, சம்பவம் குறித்து அவர் புகாரில் சொல்லியுள்ளதற்கும், சாட்சியத்தில் சொல்லியுள்ளதற்கும் குறிப்பான முரண்பாடு உள்ளது தெரிய வருகிறது.

27) இவ்வழக்கினை பொறுத்தமட்டில், அ.சா.1, 2 , 3 மற்றும் 4 ற்கும் எதிரிக்கும் இடையே உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்ற நிலையில், சர்வே எண் 47 / 6 சம்பந்தப்பட்ட வழக்கானது நிலுவையில் உள்ளது என்ற நிலையில், இது குறித்து இருதரப்பினருக்கும் இடையே முன்பகை உள்ளது மறுக்கப்படாத நிலையில், சம்பவம் அதிகாலை 5.30

மணியளவில் நடைபெற்றதாக சாட்சிகள் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில், சம்பவ இடத்திற்கு சாட்சிகள் அந்த காலகட்டத்தில் சென்றதையும், அங்கு குடிசை எரிந்ததையும் அந்த குடிசை எதிரி, தீ வைத்ததால்தான் எரிந்ததாகவும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்து இருந்தாலேயே எதிரி மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலும்.

28) இவ்வழக்கினை பொருத்தமட்டில், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்தில் எரிந்த நிலையில் தென்னங்கீற்று ஓலை இருந்ததாக சொல்லப்பட்டிருந்தாலும், அந்த கொட்டகையானது எதற்காக பயன்படுத்தப்பட்டு வந்திருந்தது என்பதாகவோ அதில் என்ன பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது என்பதாகவோ அது பயன்பாட்டிற்கான கொட்டகை என்பதாகவோ குறிப்பிட்டு காண்பிக்கப்பட்டு நிரூபிக்கப்படவில்லை. மேலும் புகைப்படங்களும் இல்லை. மேலும் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரி சம்பவ இடத்தில் தீ வைத்ததை பார்த்ததாக எந்த சாட்சியும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காமல் சம்பவ இடத்தில் எதிரி இருந்தார் என்றும், சம்பவ இடத்திலிருந்து மறைந்து எதிரி வெளியே வந்தார் என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

29) இவ்வழக்கினை பொருத்தமட்டில் எதிரிக்கும் சாட்சிகளுக்கும் இடையே சர்வே எண் 47 / 6 சம்பந்தமாக முன்பகை உள்ளது மறுக்கப்படவில்லை. மேலும் உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளதும் மறுக்கப்படவில்லை. மேலும் சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து கொட்டகையானது அப்போதுதான் வைக்கப்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. எனவே அ.சா.1ன் பயன்பாட்டில் இருந்த குடிசை எரிக்கப்பட்டதாக அ.சா.1 ஆல்

நிரூபிக்கப்படவில்லை. மேலும் குடிசை எரிந்ததால் அவருக்கு ஏற்பட்ட இழப்பு சம்பந்தமாக அவரால் எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. குடிசை எரிந்தது சம்பந்தமாக தீயணைப்பு துறையினருக்கோ காவல் நிலையத்திற்கு உடனடியாக தகவல் கொடுக்கப்பட்டதாகவோ, மேலும் ஊரணியிலிருந்து தண்ணீர் எடுத்து தீயினை அணைத்ததற்கு ஆதரவாகவும், அவர்களால் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் எதிரி எவ்வகையில் நெருப்பு ஏற்படுத்தினார் என்பதும் சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து தெரிய வரவில்லை. சாட்சிகள் எதிரி கையில் அரிவாளை வைத்து மிரட்டினார் என கூறுவதில் இருந்து அவர் நெருப்பு வைப்பதற்கு என்ன பயன்படுத்தினார் என்பதும் தெரிய வரவில்லை.

30) அ.சா.5 மற்றும் 6 ஆக விசாரிக்கப்பட்ட சாட்சிகள் தனிப்பட்ட சாட்சிகள் என்ற நிலையில், அவர்கள் தங்கள் சாட்சியத்தில் இடம் சம்பந்தமாக பேசுவதற்காக தாங்கள் அ.சா.1 ஐ சென்று பார்த்ததாகவும், அதிகாலை 5.30 மணிக்கே சென்றுள்ளதாக குறிப்பிட்டு கூறியுள்ளது அரசு தரப்பு சாட்சியத்திற்கு வலுசேர்க்கும் வகையில் இல்லை. மேலும் அ.சா.6 தனது சாட்சியத்தில் சம்பவம் குறித்து தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து அ.சா.5 மற்றும் 6 சம்பவ இடத்தில் இருந்தார்களா என்பதே அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை.

31) இதச பிரிவு 436 ன் கீழான வரையறையின் படி ஒரு குடியிருப்பு பகுதியையோ அல்லது வழிபாட்டு தலத்தையோ அல்லது பொருட்கள் வைப்பறையையோ ஒரு நபர் தீயினால் எரித்து அதன் அடிப்படையில் இழப்பு ஏற்படுத்தினால் அதற்கு அவருக்கு தண்டனை வழங்க இயலும். அவ்வகையில் பரிசீலிக்கையில் அ.சா.1 தனது கொட்டகை எரிந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 அவரது கொட்டகை எரிந்ததாக சாட்சியம்

அளித்துள்ளார். மேலும் அந்த கொட்டகை அப்போது ஏற்படுத்தப்பட்ட கொட்டகையாக அ.சா.4 குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில், அந்த கொட்டகை எதற்காக பயன்படுத்தப்பட்டது என்பதாகவோ, யாரால் பயன்படுத்தப்பட்டது என்பதாகவோ, சாட்சிகள் தங்கள் சாட்சியத்தில் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் எதிரி எதை பயன்படுத்தி நெருப்பிட்டார் என்பது குறித்தும் சாட்சிகளின் சாட்சியத்தில் தெரிய வரவில்லை. சாட்சிகள் வாக்கிங் செல்லும் போது நெருப்பு எரிந்து கொண்டிருந்ததை பார்த்து தாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றதாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில், சாட்சிகளின் சாட்சியமும், வழக்கு சம்பவமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு உள்ளதாகவே தெரிய வருகிறது.

32) இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் உறவினர் என்ற நிலையில், ஏற்கனவே உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளதால் தனிப்பட்ட சாட்சிகளை விசாரித்தால் மட்டுமே வழக்கின் உண்மை நிலை தெரிய வரும். மேலும் சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்லப்படும் தென்னங்கீற்றுகளோ, ஓலைகளோ அல்லது நெருப்பில் எரிந்ததாக சொல்லப்படும் பொருட்களோ அல்லது அதன் புகைப்படமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாத நிலையிலும், இழப்பீட்டின் அளவீடு குறித்து நிரூபிக்கும் வகையில் எவ்வித சாட்சியமும் அளிக்கப்படாத நிலையிலும், அ.சா.1 ற்கு இழப்பு ஏற்பட்டதா என்பதை அ.சா.1 ஆல் குறிப்பிட்டு சொல்லப்படாத நிலையில், சம்பவ இடமானது சர்வே எண். 47/6 ல் உள்ளதாகவும் குறிப்பிட்டு நிரூபிக்கப்படாத நிலையில், இவ்வழக்கில் முன் பகை உள்ளது குறிப்பாக தெரியவரும் நிலையில், சம்பவம் நடைபெற்றதாகவும் அந்த சம்பவத்தின் பயனாக சாட்சிக்கு இழப்பு ஏற்பட்டதாகவும், அந்த இழப்பிற்கும், சம்பவத்திற்கும் எதிரியே காரணம்

என்பது சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமாகவும், தனிப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமாகவும் தெளிவு பெற நிரூபிக்கப்பட்டால் தான் இதச 436 பிரிவின் கீழான குற்றம் நடைபெற்றதாக கருத இயலும்.

33) இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட பார்வை மகஜர் சாட்சியான அ.சா.7 அ.சா.1ன் தகப்பனார் என்ற நிலையில், அவர் முதல் விசாரணையில் சம்பவம் குறித்து சொல்லிவிட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, தனது மகள் சொன்னதன் அடிப்படையில் சம்பவம் குறித்து தனக்கு தெரிய வந்ததாகவும், பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில், மற்றொரு சாட்சியமும் அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், அ.சா.1டம் புகார் பெற்ற அ.சா.9 தனது சாட்சியத்தில் அ.சா.1 மட்டுமே காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில், புலன் விசாரணை அதிகாரியும் தனது சாட்சியத்தில் தனக்கு உரிமையியல் சம்பந்தப்பட்ட பிரச்சனை நிலுவையில் இருந்தது குறித்து தெரிய வந்ததாக குறிப்பான சாட்சியம் அளிக்கப்படவில்லை.

34) இவ்வழக்கின் தடயங்கள் எதுவும் கைப்பற்றப்படாத நிலையிலும் நெருப்பிட பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் பொருளும் கைப்பற்றப்படாத நிலையிலும், இவ்வழக்கில் ஏற்கனவே எதிரிக்கும் சாட்சிகளுக்கும் முன்பகை உள்ளது தெளிவாக தெரிய வருகின்ற நிலையில், தனிப்பட்ட சாட்சிகளின் அடிப்படையிலேயே சம்பவம் குறித்து நிரூபிக்க இயலும் என்றும், அவ்வாறு தனிப்பட்ட சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாத நிலையில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியம் ஒன்றுக்கொன்று முரண்பட்டு உள்ள நிலையில், சம்பவ சமயத்தில் சம்பவ இடத்திற்கு எதற்காக வந்தார்கள் என்றும், யார் யார்

வந்தார்கள் என்றும் யாருடைய கொட்டகை எரிந்ததாகவும், குறிப்பாக சொல்லப்படாமல் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் சாட்சிகளின் சாட்சியம் முழுமை பெறாமல் எதிரி சம்பவ இடத்தில் இருந்தார் என குறிப்பிட்டு சொல்லி உள்ளதும் தெரிய வருகிறது. அவ்வாறான நிலையில் எதிரி சம்பவ இடத்தில் இருந்ததாக சாட்சிகளால் சொல்லப்பட்டிருந்தாலும், சம்பவத்திற்கு எதிரி தான் காரணம் என்பது அவர்களின் சாட்சியத்தில் குறிப்பிட்டு தெரிய வராத நிலையில், தனிப்பட்ட சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என குறுக்கு விசாரணையில் சொல்லி உள்ள நிலையில், இவ்வழக்கினை பொருத்தமட்டில் தனிப்பட்ட சாட்சிகளை விசாரித்தால் மட்டுமே வழக்கின் உண்மை நிலை தெரிய வரும். அவ்வாறு சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாமல், தடயங்கள் எதுவும் கைப்பற்றப்படாமல் சம்பவ இடத்தில் கொட்டகை எதிரியால் எரிக்கப்பட்டதாக அரசு தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டானது அரசு தரப்பு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரி மீதான இதச பிரிவு 436 ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

35) எதிரி மீதான இதச பிரிவு 294 (பி) இன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து பரிசீலிக்கப்படுகையில், இதச பிரிவு 294 (பி) இன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட வேண்டும் எனில், ஒரு நபர் மற்றொரு நபரை பொது இடத்தில் அசிங்கமாக பேசி, அதனால் அருகில் இருந்த நபர்கள் அவமானப்படும் வகையில் அவரது செயல்பாடு இருந்ததாக சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து தெரிய வரவேண்டும். இவ்வழக்கினை பொருத்தமட்டில் புகாரில் எதிரி பயன்படுத்தியதாக சொல்லப்படும் வார்த்தை குறிப்பிட்டு சொல்லப்பட்டு, சாட்சியத்திலும்

குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ள நிலையில், சாட்சிகளின் சாட்சியத்தில் எதிரி சம்பவ இடத்தில் இருந்தார் என்று சொல்லப்பட்டு, அதன் அடிப்படையில் மேற்கண்ட வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளதாக சொல்லப்பட்ட நிலையில், அந்த வார்த்தை பயன்படுத்தியதால் தங்களுக்கு அருவருப்பு ஏற்பட்டதாகவோ அல்லது அருகில் இருந்தவர்களுக்கு அருவருப்பு ஏற்பட்டதாகவோ சாட்சிகள் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காத நிலையில், வழக்கில் ஏற்கனவே எதிரி மீதான இதச பிரிவு 436 கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்ற நிலையில், ஏற்கனவே எதிரிக்கும் சாட்சிகளுக்கும் முன்பகை உள்ளது மறுக்கப்படாத நிலையில், எவ்வித தனிப்பட்ட சாட்சிகளும் எதிரி அவ்விடத்தில் அசிங்கமாக பேசியதாக சாட்சியம் அளிக்காத நிலையில், எதிரி மீதான பிரிவு 294 (பி) யின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை எனவும், எனவே மேற்கண்ட பிரிவின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

36) எதிரி மீதான இதச பிரிவு 506 (ii)இன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து பரிசீலிக்கையில், மேற்கண்ட பிரிவின் கீழ் ஒரு குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட வேண்டும் எனில், ஒரு நபர் மற்றொரு நபரை கொலை செய்யும் நோக்கத்தில் ஆயுதத்தை காண்பித்து பயமுறுத்தி அதனால் அவருக்கு உயிர் பயம் ஏற்பட்டதாக சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து தெரிய வரவேண்டும். இவ்வழக்கில் அனைத்து சாட்சிகளும் தங்களது சாட்சியத்தில் எதிரி அரிவாளால் கொலை மிரட்டல் விடுத்து, தங்கள் பிள்ளைகளையும் கொலை செய்து விடுவதாக மிரட்டல் ஏற்படுத்தினார் என சாட்சியம் அளித்துள்ள நிலையில், இது குறித்து தனிப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து தெரிய வராத நிலையில் அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்தது சம்பந்தமாக புகார் எதுவும்

அளிக்கப்பட்டு, பாதுகாப்பு எதுவும் பெறப்படுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாக சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து தெரிய வராத நிலையில், மேற்கண்ட பிரிவின் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அரசு தரப்பால் எதிரி மீதான இதச பிரிவு 436, 294(b), 506(ii)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்ற நிலையில், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் எதிரியை விடுதலை செய்யலாம் என நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, எதிரி மீது பிரிவுகள் 436, 294(பி), 506(2)ன் படியான குற்றச்சாட்டு அரசுத் தரப்பால் தகுந்த சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, அவரை குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும் அவரால் கொடுக்கப்பட்ட பிணை முறி ஆவணங்கள் அனைத்தும் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கில் சான்று பொருள் முன்னிலைப்படுத்தவில்லை.

இவ்வுத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ம் நாள் பகரப்பட்டது.

KALAINILA Digitally signed by KALAINILA

உதவி அமர்வு நீதிபதி,
தேவகோட்டை.

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | செல்வி |
| 2 | அ.சா.2 | பூபதி |

| | | |
|---|---|---|
| 3 | அ.சா.3 | சுந்தரபாண்டி |
| 4 | அ.சா.4 | காளியம்மாள் |
| 5 | அ.சா.5 | வாசுதேவன் |
| 6 | அ.சா.6 | நாராயணன் |
| 7 | அ.சா.7 | ராமநாதன் |
| 8 | அ.சா.8 | பாலசுப்பிரமணி |
| 9 | அ.சா.9 | சேகர் முனியப்பன் |
| 10 | அ.சா.10 | அண்ணாத்துரை |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | புகார் மனு |
| 2 | அ.சா.ஆ.2 | புகார் மனுவில் உள்ள கையெழுத்து |
| 3 | அ.சா.ஆ.3 | புகார் மனுவில் உள்ள கையெழுத்து |
| 4 | அ.சா.ஆ.4 | புகார் மனுவில் உள்ள கைரேகை |
| 5 | அ.சா.ஆ.5 | பார்வை மகஜர் |
| 6 | அ.சா.ஆ.6 | மாதிரி வரைபடம் |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள் :</u>**

– இல்லை ––

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்:</u>**

– இல்லை –

KALAINILA Digitally signed by KALAINILA

உதவி அமர்வு நீதிபதி,
தேவகோட்டை.

**<u>குறிப்பு</u>**

1. வழக்கின் விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. எதிரி இன்று விடுதலை செய்யப்பட்டார்.
4. கூடுதல் அரசுக் குற்றத்துறை வழக்குரைஞருக்கு தீர்ப்பிரையின் நகல் வழங்கப்பட்டது.